III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.125/2017 and 355/2019

Deposition of witness for the Plaintiff/PW1
solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 04-09-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : மாதேஸ்குமார் | Village | : |
| Father's / Husband's Name | : குப்புசாமி | Calling | : |
| Age | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு அசல் வழக்கு எண்.125/2017 வழக்கின் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

வாதி தரப்பில் தாக்கல் செய்திருக்கின்ற வா.த.சா.ஆ.10 முதல் 12 வரையிலான ஆவணங்களில் கண்டுள்ள சொத்து ராமசாமி நகரில் இருப்பதாக கண்டுள்ளது என்றால் சரிதான். இந்த மூன்று ஆவணங்களின் வாயிலாகத் தான் நானும் இவ்வழக்கின் 2, 3 பிரதிவாதிகளும் உரிமை கோருகின்றோம் என்றால் சரிதான். 2 வது பிரதிவாதி என்னுடைய தம்பி, 3 வது பிரதிவாதி என்னுடைய தங்கை. 4 ஆம் பிரதிவாதி சரோஜா 5 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த வா.த.சா.ஆ.8 செட்டில்மெண்ட் பத்திரம் தான் எங்களுடைய சொத்திற்கு தாய் பத்திரம் என்று சொன்னால் சரிதான். இதற்கு முன்பாக வேறு எந்த பத்திரங்களும் கிடையாது. சாட்சி தற்போது தனக்கு முன்பு லேஅவுட் போட்டிருக்கிறார்கள் என்றும் வேறு பத்திரங்கள் பற்றி தனக்கு தெரியாது என்று கூறுகின்றார். என்னிடம் காட்டப்படுகின்ற வா.த.சா.ஆ.8 தாய் பத்திரத்தில் சொத்து விவரத்தில் ராமசாமி நகர் விரிவு என்று சொல்லப்பட்டிருக்கின்றது என்றால் சரிதான். 4 ஆம் பிரதிவாதி 5 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த வா.த.சா.ஆ.8 செட்டில்மெண்ட் பத்திரத்தின் எந்தவொரு பகுதியிலாவது செட்டில்மெண்ட் செய்யக்கூடிய சொத்தின் முந்தைய உரிமையாளர்கள் பற்றியோ முந்தைய ஆவணங்கள் பற்றியோ விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றதா என்றால் முன்னோர்கள் அனுபவித்து வந்ததாக சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த முன்னோர்கள் யார் அவர்களுடைய வாரிசுகள் யார் என்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாதி தரப்பில் தாக்கல்

செய்திருக்கின்ற வா.த.சா.ஆ.31 ஆவணம் என்னால் அசல் வழக்கு எண்.355/2019 வழக்கில் உறுத்து கட்டளைக்கான இடைக்கால மனுவில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் எனக்கு தெரியவில்லை எனது வழக்கறிஞரைத்தான் கேட்க வேண்டும். வா.த.சா.ஆ.31 ஆவணத்தை சாட்சியிடம் காட்டி இந்த ஆவணம் தான் அம்பத்தூர் நீதிமன்றத்தில் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணமா என்று கேட்பொழுது சாட்சி ஆமாம் என்று ஒப்புக்கொள்கின்றார். வா.த.சா.ஆ.31 Revenue Demand Notice 4 ஆம் பிரதிவாதி சரோஜவுக்கு வழங்கப்பட்டதாக உள்ள அறிவிப்பு என்று சொன்னால் சரிதான். அந்த அறிவிப்பு அம்பத்தூர் தாலுக்கா அலுவலகத்தினால் வழங்கப்பட்டதாக கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த அறிவிப்பில் கொரட்டுர் கிராமத்தின் சர்வே எண்கள்.515/3 பி, 515/4 பி மற்றும் 516/1 பி,1 சி ஆகிய மூன்று சர்வே எண்களும் குறிப்பிடப்பட்டும் அதன் பரப்பளவு 60 செண்டுகள் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதேபோன்று எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு பரப்பளவு நிலம் உள்ளது என்று குறிப்பிட்டு தனித்து காட்டப்படவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய தாய் பத்திரம் வா.த.சா.ஆ.8 ஆவணத்தில் சர்வே எண்கள்.515/3 பி, 516/1 பி, 1 சி என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.த.சா.ஆ.31 ஆவணத்தில் பின்புறத்தில் 24.03.1983 என்று கண்டுள்ளது என்றால் அந்த எண்கள் எனக்கு சரியாக புலப்படவில்லை. 4 ஆம் பிரதிவாதி வா.த.சா.ஆ.8 செட்டில்மெண்ட் பத்திரத்தில் அவருக்கு வழங்கப்பட்டதாக சொல்லும் வா.த.சா.ஆ.31 அறிவிப்பு பற்றி சொல்லியிருக்கின்றார்களா என்றால் சொல்லப்படவில்லை. அம்பத்தூர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.42/2017 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு எண்.249/2017 வழக்கில் நீதிமன்றமானது பத்தி 7 (e)ல் நான் தாக்கல் செய்திருக்கின்ற 24.03.1983 தேதியிட்ட ரசீதானது அம்பத்தூர் தாலுக்கா 1997 க்கு தோன்றுவதற்கு முன்பே அதன் பேரில் 1983 ல் வழங்கப்பட்டிருப்பதால் அது உண்மையானது அல்ல என்று முடிவு கண்டிருக்கின்றது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. இந்த முடிவுக்கு எதிராக நான் மேல்முறையீடு செய்திருக்கின்றேனா என்றால் மேல்முறையீடு செய்யவில்லை.

(அறிவார்ந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).